திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய போளூர் தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், அப்பகுதியில் இருக்கக்கூடிய வலையவார்குளம், காங்கேயனூர், நம்மேந்தல் கிராமப் பகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, வருங்காலத்தில் இந்தச் சாலையை சரி செய்தவுடனே பேருந்துகளை விடுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வாரத்தில் விடுகிறேன் என்று சொல்லிவிட்டாரே.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சாலை அமைத்த ஒரே வார காலத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 248, திரு.எஸ். ஆசைமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

248—

புளியஞ்சேரியில் கால்நடை மருந்தகம் கட்டுதல்

***22285**—*திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியம், புளியஞ்சேரி, விக்ரபாண்டியம், வல்லம் ஆகிய கிராமங்கள் பயனடைய புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியத்தில் புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1995 ஏப்ரல் 6]

முற்பகல் 10.35

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அந்தப் புளியஞ்சேரி கிராமத்தில் வருகிற நிதி ஆண்டிலாவது அந்தக் கால்நடை மருந்தகத்தை தொடங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சேரி கிராமம் நாகை காயிதே மில்லத் மாவட்டம், கொடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொடைவாசல் ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், திருமலைப் பாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், ஆக 2 கால்நடை மருந்தகங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த ஒன்றியத்தில் 8 இடங்களில் கால்நடை கிளை நிலையங்கள் இருக்கின்றன. புளியஞ்சேரி கிராமத்தில் 2 கி.மி. தொலைவில் கண்டிர மாணிக்கம் என்ற கால்நடை கிளை நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் வடவேரில் ஒரு கிளை நிலையமும் உள்ளது. இதை தவிர 6 கிளை நிலையங்கள் உள்ளதால், புதிதாக கால்நடை மருந்துவமனை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகத்திற்கு அருகே பல கால்நடை கிளை நிலையங்கள் இருப்பதால் இதற்கு வாய்ப்பில்லை என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்தையே முழுமையாக நம்பி இருக்கக் கூடிய மாவட்டம், 100 சதவீதம் விவசாயிகளே அங்கு வசிக்கிறார்கள். விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே கால்நடை வளர்ப்பதையே பெரியத் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள். எனவே அந்தக் கால்நடை மருந்தகங்கள் இருக்கும் தூரத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், புளியஞ்சேரி கிராமத்தினுடைய அந்தப் பகுதியிலே சுற்றுப்புற கிராமங்களில் இருக்கக் கூடிய கால்நடைகளுடைய நலனைக் கருதி என்னுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சேரி மற்றும் அதனைச் சுற்றியிருக்கிற கிராமங்களில் போதிய கால்நடைகள் இருக்குமேயானால், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, ஒரு ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, அதற்கு வாடகை இல்லாத கட்டிடத்தையும், பங்குத் தொகையையும் செலுத்தி தீர்மானத்தை நிறைவேற்றியதற்கு பிறகு அதற்கான சாத்தியக்

கூறுகளை அலசி ஆராய்ந்து அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.249, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

249—

நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்

***16281**—*திரு. ஆர். கோடிமாரி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதியில் நாகூர் நுழைவாயிலில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் நுழைவாயிலில் இருக்கக்கூடிய இந்தப் பாலம் மிகவும் பழமையான பாலம். அந்தப் பாலம் இரண்டு வருடத்திற்கு முன் நாகையில் அடித்த புயல் சீற்றத்தால் பழுதடைந்து விட்டதால், அங்கு வாகன போக்குவரத்து மற்றும் மக்கள் போக்குவரத்து தடைபட்டது. அதனால் சுமார் 30 கிலோமீட்டர் சுற்றித்தான் நாகைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் குறையைப் போக்க, இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற பாலத்தைக் கட்டுவதற்கு ஆய்வு செய்தபோது ஏறக்குறைய 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே பெரும் நிதிச் செலவை இந்த அரசு உடனடியாக